Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



திசையன்விளை சிறப்பு நிலைப் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் பிறப்பிப்பவர் முன்னிலை : திரு.வை. பால்ராஜ்

நா.க.எண். 539/2024

நாள் 19. 02. 2025

பொருள் மனை வரன்முறை – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருநெல்வேலி மண்டலம் – திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை பேரூராட்சி – திசையன்விளை கிராமம் சர்வே எண் 103/1A3A இல் 2500 ச.மீ. (0.6177 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கிட இறுதி உத்திரவு பிறப்பித்து (12 மனைகள்) வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை

1. திரு. ஜெயராமன் (POA) மற்றும் திரு. திருநீலகண்டன் அவர்களின் விண்ணப்ப நாள் 09.08.2022
2. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்ட கடித எண் TSTLP78W - (சாலைவரைபட வழங்கிய நாள் 16.11.2022)
3. இணை இயக்குநர்/துணை இயக்குநர்/உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு, திருநெல்வேலி செயல்முறை ந.க.எண் TSTLP78W /2022/TCP நாள் 07.12.2022
4. நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 19799/2020 நாள் 24.12.2020
5. அரசாணை நிலை எண் 138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04.06.2004
6. அரசாணை நிலை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04/05/2017
7. அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை நாள் 31.01.2020
8. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 23.09.2020
9. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020
10. அரசு கடித எண் 19113/நவம்பர் 4 (3) / 2017 – 1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 30.08.2017
11. ஆணையர், நகர் ஊரமைப்பு துறை சுற்றறிக்கை கடித எண் 13686/2017/LA1 நாள் 08.09.2017

13 திரு. ஜெயராமன் (POA) மற்றும் திரு. திருநீலகண்டன் அவர்களின் கடித நாள் 23.11.2022 (தானபத்திர ஆவண எண் 3758/2022 நாள் 22.11.2022)

14. திரு. ஜெயராமன் (POA) மற்றும் திரு. திருநீலகண்டன் அவர்களின் கடித நாள் 25.11.2022, 28.112022

15. நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 4367/2019/ TCP2 நாள் 14.10.2019

16. இப்பேருராட்சி மன்ற தீர்மான எண் 158/2025 நாள் 31.12.2024

17. இவ்வலுவலக கடித ந.க.எண் 539/2024 நாள் 11.12.2024

18. தொடர்புடைய ஆவணங்கள்

ஆணை,

பார்வை (1)இல் காணும் விண்ணப்பத்தின் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், திசையன்விளை சார்பதிவாளர் சரகம், திசையன்விளை தாலுகா, திசையன்விளை கிராமம், திசையன்விளை நகர பஞ்சாயத்திற்கு எல்கைக்குட்பட்ட வார்டு 16, இட்டமொழிரோடு தெருவில் உள்ள திசையன்விளை வருவாய் கிராம சர்வே எண் 103/1A3A இல் அமையும் 2500 ச.மீ. (0.6177 ஏக்கர்) பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு பார்வை (2) மற்றும் (3) இல் காணும் விபரப்படியான திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர் அவர்களின் ந.க.எண் TSTLP78W/2022/TCP நாள் 07.12.2022 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை 4 முதல் 12 வரை உள்ள அரசாணைகள் மற்றும் அரசு கடிதங்களில் வழங்கப்பட்ட வழிமுறைகளின்படி மேற்குறிப்பிட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி மூலம் இறுதி ஒப்புதல் வழங்கிடும் பொருட்டு கீழ்கண்டவாறு அனைத்து விதமான அபிவிரித்து பணிகளும் மற்றும் அடிப்படை வசதிகளும் தங்களது சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டதில் அடிப்படையிலும் பார்வை (13) இல் காணும் திசையன்விளை சார்பதிவாளர் அலுவலக தான பத்திர ஆவண எண் 3758/2022 நாள் 22.11.2022இன்படி பொது உபயோக பயன்பாட்டிற்கு தமிழ்நாடு அரசிற்காக மேதகு ஆளுநர் அவர்களுக்கு திசையன்விளை பேரூராட்சியின் செயல் அலுவலர் வாயிலாக உத்தேச சாலைகள் மற்றும் பொதுபயன்பாட்டிற்கு பூங்கா தான கிரையமாக ஒப்படைக்கப்பட்டதின் அடிப்படையிலும் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு உரிய கட்டணங்கள் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பார்வை (16)இல் காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் மன்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பார்வை (17) இல் காணும் விபரப்படியான இவ்வலுவலக கேட்பு அறிவிப்பின் அடிப்படையில் தங்களால் கீழ்க்கண்டவாறு உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்ட விபரம்

வ.எண்	விபரம்	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
1	சாலை மற்றும் வாறுகால் வசதி அமைத்தல்	சாலை வசதி (தார் சாலை) மற்றும் வாறுகால் அமைத்தல் பணி விண்ணப்பதாரரால் முடிக்கப்பட்டது
2	தெருவிளக்கு அமைத்தல்	புதிதாக தெருவிளக்குகள் அமைப்பதற்கு மின்கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பேரூராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டண விபரங்கள்

வ.எண்	விபரம்	கட்டணம்	கட்டணம் செலுத்தப்பட்ட விபரம்
1	மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் (மனை ஒன்றுக்கு ரூ. 1000/– வீதம் 12 மனைகளுக்கு	ரூ. 12000/–	கனரா வங்கி, திசையன்விளை முப்பிரதி செலுத்து சீட்டு எண் 495 /2024–2025 நாள் 26.07.2024
2	காலிமனைவரி (2500 ச.மீ)	64560/-	கனரா வங்கி, திசையன்விளை முப்பிரதி செலுத்து சீட்டு எண் 1314 /2024–2025 நாள் 05.02.2025
3	நூலக வரி	6456/-	கனரா வங்கி, திசையன்விளை முப்பிரதி செலுத்து சீட்டு எண் 1314 /2024–2025 நாள் 05.02.2025
4	கொடிநாள் வசூல்	6500/-	முன்னாள் படை வீரர் நலத்துறை , தமிழ்நாடு அரசுக்கு செலுத்தப்பட்டது ரசீது எண் FA/Fund/929025 நாள் 06.02.2025

அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட கட்டண விபரங்கள்

வ. எண் (1)	புல எண் (2)	வழிகாட்டி மதிப்பு (3)	மொத்த விஸ்திரணம் (4)	வழிகாட்டி மதிப்பின் விஸ்திரணம் (5) (3) X (4)	அரசாணையின்படி 3 சதவீதம் அரசு தலைப்பில்செலுத்தப்பட்டது (6)	குறிப்பு
1	103/1A3A	ரூ.9505/–	2500 ச.மீ	ரூ.23762500/–	ரூ.712875/–	IFHRMS-(021760800AS22709) இன் கீழ் இ – செல்லான் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பதாரரால் மேற்படி மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதி மேற்கொள்ளப்பட்ட நிலையில் உரிய கட்டணங்கள் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டதின் அடிப்படையிலும் கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகளில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் பாளையங்கோட்டை பதிவு மாவட்டம் , திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட திசையன்விளை கிராம புல எண் 103/1A3A இல்

2500 ச.மீ (0.6177 ஏக்கர்) பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி இதன் மூலம் இறுதி உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலேயே மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நிதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய பேரூராட்சி துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2. மனை விற்பனை செய்வதற்கு முன்பு (Real Estate Regulatory Authority) நிர்வாக அனுமதி பெற்று மனை விற்கப்பட வேண்டும் . The Tamilnadu Gvernment in G.O.Ms.No 112, Housing and Urban Development Department Dated : 22.06.2017 have approved the Tamil Nadu real Estate (Regulation & Development Act, 2016) the promoter has to advertise, market book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building as the case may be in any real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority - ன்படி நடவடிக்கை தொடரும்படி அறிவுறுத்தப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறை/ பேரூராட்சி முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோக மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே (TNCDBR) – 2019 இல் குறிப்பிட்டுள்ள Residendial use - இல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறை / பேரூராட்சியின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே இதர உபயோகத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த /உயர் அழுத்த மின் கம்பிப் பாதை தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.

6. 7.20 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்த 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

7. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

8. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி/இசைவு (Planning Permission/ concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் அதனை தாங்களே பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

9. பேரூராட்சி துறையிடமிருந்து மனைபிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் /விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலின் 6 X 4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அகீகரித்த மற்ற தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

11. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட (Planning Permission/ concurrence) ஒப்புதல் / அனுமதி எவ்வித முன்னறிவிப்பு இன்றி நகர் ஊரமைப்பு துறை / பேரூராட்சி துறையால் ரத்து செய்யப்படும்.

12. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு பேரூராட்சி துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

13. மேலும் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் தொடர்பாக கூடுதல் கட்டணங்கள் ஏதேனும் செலுத்த கோரி தணிக்கை தடை எழுப்பப்பட்டால் , தடை எழுப்பப்பட்ட ஏழு தினங்களுக்குள் உரிய கட்டணங்கள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது என்ற விபரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

14. பொது உபயோக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்காவிற்கான இடத்தினை சுற்றி முள்வேலி அமைத்து தர வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விபரம்	பரப்பளவு விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	2500 ச.மீ (61.77 செண்ட்)
ஒதுக்கிய மனைகள்	12
பொது ஒதுக்கீடு, மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது	திசையன்விளை பேரூராட்சிக்க (தானபத்திர எண் 3758/2022 நாள் 22.11.2022 மூலம்) தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
1. பூங்கா	164.25 ச.மீ (10.03 %)
2. உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு பரப்பு	862.97 ச.மீ
3. உள்ளாட்சிக்கான பொது உபயோக ஒதுக்கீடு	20.92 ச.மீ (1.27 %)
4. மின்வாரியம்(TANGED CO)	20.00 ச.மீ (1.22 %)
5. EWS மனைகள்	–

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மாறாக செயல்பட்டதாக அறிய வந்தால் இவ்வாணையானது எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்வதோடு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. அனுமதிக்கப்பட்ட வரைபடம்

19/2/25

செயல் அலுவலர்
சிறப்பு நிலை பேரூராட்சி
திசையன்விளை


19/2/25

பெறுநர்

திரு. ஜெயராமன் (POA) மற்றும் திரு. திருநீலகண்டன்
348, சுடலையாண்டவர் கோவில் தெரு,
திசையன்விளை – 627 657

நகல்

1. இணை இயக்குநர் அவர்கள், நகர் ஊரமைப்பு துறை, திருநெல்வேலி
2. செயலாளர் (திட்டம்) தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையம் (TNRERA) இர்வின் பாலம்ரோடு, முதல்தளம், சென்னை எழும்பூர்
3. உதவி இயக்குநர், பேரூராட்சிகள் திருநெல்வேலி மண்டலம், திருநெல்வலி
4. வட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் திசையன்விளை,
5. சார்பதிவாளர், திசையன்விளை



அளவுஉதவி வரைவாளர்

வரைவாளர் நிலை-III

மேற்பார்வையாளர்

மனைப்பிரிவு வரைபடம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம்

நிலையின்மை வட்டம்

நிலையின்மை பேரூராட்சி

நிலையின்மை கிராமம்

சர்வே எண். 103/1(3)ல் "ஏ" அமைவுப் குடியிருப்பு
மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்

அளவு: 1:400

நிலையுதவு விண்ணப்ப எண் - 123/2022

கோரியமனைகள் - 12

ஒதுக்கியமனைகள் - 12

குறிப்பு

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு : 2500.00 ச.மீ (61.77 சென்ட்)

உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் முலை முடக்கு பரப்பு : 862.97 ச.மீ (-)

மீதமுள்ள இடத்தின் பரப்பு : 1637.03 ச.மீ

மனைப்பிரிவு இடநில எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள்

நிலையின்மை பேரூராட்சிக்கு தான பத்திரம் எண் 3758 /2022 நாள் : 22-11-2022 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி

1. உத்தேச மனைப்பிரிவு சாலை பரப்பு : 862.97 ச.மீ
2. பூங்கா - 164.25ச.மீ (10.03%)
3. (அ) மின்மாற்றி அமைவிடம் (TANGEDCO) - 20.00ச.மீ (1.22%)
4. (ஆ) உள்ளாட்சிக்கு - 20.92ச.மீ (1.27%)

கட்டிட வரம்பு - 7.20மீ அகல சாலைகளுக்கு 1.50மீ
10.00மீ அகல சாலைகளுக்கு 1.50மீ

மூலை முடக்கு - 7.20மீ,9.00 மற்றும் 10.00மீ அகல சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ

நிபந்தனைகள்

1.தமிழ்நாடு நிலை எண்:134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:20.09.2002-ன் படி நில உரிமை குறித்து பேரூராட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் சாலைகள் மற்றும் முலைபுடைந்த ஆகியவற்றில் நிலப்பரப்பினை நிலையின்மை பேரூராட்சிக்கு தான பத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

2.இம்மனைப்பிரிவுக்கு பேரூராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் திட்டத்தில் எந்தத்தருவையாலும் நில ஆதிதிர மாவுக்கை எடுக்கப்படவில்லை என்றும் மற்றும் நில ஆதிதிரல் செய்து தரக்கோரி மனைப் பருவாய் ஆலுவலரிடமிருந்து உத்திரவாகன் ஏதும் பெறப்படவில்லை என்றும் செயல் அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3.நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையில் என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

ம.வ/திலி.மா.ந.ஊ.எண்- SWP /45 /2022

நிலை தியக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி-5



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate